# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தேர்விற்கான திட்டம், பாடத்திட்டம் மற்றும் மாதிரி வினாத்தாள் (கொள்குறி வகை)

குறிப்பு:-

**தொகுதி-VI**
**(வனத் தொழில் பழகுநர்)**
**தொகுதி-VIIA**
**(செயல் அலுவலர், நிலை-I, இந்துசமய அறநிலையத் துறை)**

***மற்றும் இதர ஒரு நிலை கொண்ட போட்டித் தேர்வுகள்***

**<u>கட்டாய தமிழ் மொழி தகுதித் தேர்விற்கான பாடத்திட்டம்</u>**

**<u>(கொள்குறி வினாவிற்கான தலைப்புகள்)</u>**

**<u>பத்தாம் வகுப்பு தரம்</u>**

1. பிரித்தெழுதுதல் / சேர்த்தெழுதுதல்.
2. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்.
3. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.
4. பிழை திருத்தம் (i) சந்திப்பிழையை நீக்குதல் ( ii) மரபுப் பிழைகள், வழுவுச் சொற்களை நீக்குதல் / பிறமொழிச் சொற்களை நீக்குதல்.
5. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.
6. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்.
7. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.
8. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.
9. வேர்ச்சொல்லைக் கொடுத்து / வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயரை / உருவாக்கல்.
10. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்.
11. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்.
12. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்.
    (எ.கா.) குவிந்து-குவித்து
13. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
14. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் - தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்.
15. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்
16. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச் சொல்)
17. விடை வகைகள்.

18. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் (எ.கா.) கோல்டு பிஸ்கட் – தங்கக் கட்டி.
19. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக (எ.கா.) தஞ்சாவூர் – தஞ்சை
20. நிறுத்தற்குறிகளை அறிதல்.
21. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு (வாரான் – வருகிறான்).
22. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்.
23. பொருத்தமான காலம் அமைத்தல்
    (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்).
24. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.
25. சரியான இணைப்புச் சொல்
    (எனவே, ஏனெனில், ஆகையால், அதனால், அதுபோல).
26. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.
27. இருபொருள் தருக.
28. குறில் – நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு.
29. கூற்று, காரணம் – சரியா? தவறா?
30. கலைச் சொற்களை அறிதல் :-
    எ.கா. – Artificial Intelligence – செயற்கை நுண்ணறிவு
    Super Computer - மீத்திறன் கணினி
31. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்
32. சொற்களின் கூட்டுப் பெயர்கள் (எ.கா.) புல் –புற்கள்
33. சரியான தொடரைத் தேர்ந்தெடுத்தல்
34. பிழை திருத்துதல் (ஒரு-ஓர்)
35. சொல் – பொருள் – பொருத்துக
36. ஒருமை-பன்மை பிழை
37. **பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.**

## மாதிரி கொள்குறி வினாக்கள்

## பத்தாம் வகுப்பு தரம்

### 1. பிரித்தெழுதுதல் / சேர்த்தெழுதுதல்.

(அ) பாகற்காய் - பிரித்தெழுதுக

A) பாகு + அல் + காய்

(B) பாகு + அற்காய்

(C) பாகற் + காய்

(D) பாகு + கல் + காய்

(ஆ) பைந்நிணம் - பிரித்தெழுதுக

A) பை + நிணம் (B) பை + இணம்

(C) பசுமை + நிணம் (D) பசுமை + இணம்

(இ) பிரித்தெழுதுக

நன்கணியர்

(A) நன்கு + அணியர் (B) நன் + அணியர்

(C) நான்கு + அணியர் (D) நன்கு + கணியர்

(ஈ) சேர்த்து எழுதுக.

பனை + ஓலை=

A) பனையோலை

(B) பனைஓலை

(C) பனைவோலை

(D) பனைவ்வோலை

(உ) "அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரம்தளிர்த் தற்று"

இதில் அன்பகத்து இல்லா என்பதனை எவ்வாறு பிரிக்கலாம்

A) அன்பு + பகத்து + இல்லா (B) அன்பு + அகத்து + இலா

(C) அன்பு + பகம் + இல்லா (D) அன்பு + அகத்து + இல்லா

**2. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்.**

(அ) அரும்புதல் – எதிர்ச்சொல் தருக.

A) மயங்குதல்

(B) ஓடுதல்

(C) மெலிதல்

(D) விரிதல்

(ஆ) அணித்து – எதிர்ச் சொல்லைக் கண்டறிக

A) தொலைவில்

(B) உய்த்து

(C) கொடுத்து

(D) அளத்தல்

**3. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.**

(அ) தவறான இணை எது?

A) மணத்தக்காளி - வாய்ப்புண்

(B) முசுமுசுக்கை வேர் - இருமல்

(C) அகத்திக் கீரை - கண்நோய்

(D) வேப்பங்கொழுந்து - மார்புச்சளி

(ஆ) பொருந்தாத இணை எது?

A) மேற்கு மலையிலிருந்து வந்தவை - சந்தனம், ஆரம்

(B) கீழ்கடலில் விளைந்தவை - பவளம்

(C) வடமலையிலிருந்து வந்தது - கறி (மிளகு)

(D) தென்கடலில் இருந்து கிடைத்தவை - முத்து

(இ) பொருந்தாச் சொல்லைக் கண்டறிக

பல்லவர் காலத்து ஓவியங்கள் அல்லாததைக் கண்டறிக

(A) மாமல்லபுரம் (B) மாமண்டூர்

(C) தஞ்சைப் பெரிய கோயில் (D) காஞ்சி கைலாசநாதர் கோயில்

(ஈ) பொருந்தா இணையைக் கண்டறிக

(A) பையுள் – இன்பம் (B) பனவன் - அந்தணன்

(C) விபுதர் – புலவர் (D) அல்கு – இரவு

**4. பிழை திருத்தம் (i) சந்திப்பிழையை நீக்குதல் (ii) மரபுப் பிழைகள், வழுவுச் சொற்களை நீக்குதல் / பிறமொழிச் சொற்களை நீக்குதல்.**

(அ) வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

I. வலது பக்கம் சுவறில் எழுதாதே

II. வலப் பக்கச் சுவரில் எழுதாதே

III. வலப் பக்கச் சுவற்றில் எழுதாதே

IV. வலப் பக்கச் சுவறில் எழுதாதே

A) IV (B) I

(C) II (D) III

(ஆ) வழூஉச் சொல் இல்லாத தொடரை எழுதுக.

A) சென்னைக்கு அருகாமையில் இருப்பது மதுரை அல்ல

(B) சென்னைக்கு பக்கத்தில் இருப்பது மதுரை இல்லை

(C) சென்னைக்கு அருகாமையில் இருப்பது மதுரை அல்லை

(D) சென்னைக்கு அருகில் இருப்பது மதுரை அன்று

(இ) சந்திப் பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக

1.கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

2. கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

3. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது

4. மேடை பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது

(A) 1 மற்றும் 3 (B) 2 மற்றும் 3

(C) 3 மற்றும் 4 (D) 1 மற்றும் 4

(ஈ) வழுவற்ற தொடர் எது?

A) பனை இலையால் கூரை போட்டனர்

(B) பனை ஓலையால் கூரை வேய்ந்தனர்

(C) பனை இலையால் கூரை கட்டினர்

(D) பனை ஓலையால் கூரை முடுக்கினர்

(உ) சந்திப்பிழை இல்லாத தொடரைக் காண்க

A) விடையை தேடிப்பார்க்கக் கடினமாக இருந்தது.

(B) விடையைத் தேடிப்பார்க்கக் கடினமாக இருந்தது.

(C) விடையைத் தேடிபார்க்கக் கடினமாக இருந்தது

(D) விடையைத் தேடிப்பார்க்க கடினமாக இருந்தது

(ஊ) சந்திப்பிழையைச் சரிபார்த்து எழுதுக

A) மருத்துவப் படிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்

(B) மருத்துவபடிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்

(C) மருத்துவ படிப்பிற்கு என்னை தேர்வு செய்தனர்

(D) மருத்துவப் படிப்பிற்கு என்னை தேர்வு செய்தனர்

(எ) மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக

(A) பலா மூசு (B) முற்றிய தேங்காய்

(C) அவரைப் பிஞ்சு (D) முருங்கைப் பிஞ்சு

(ஏ) மரபுப் பிழையற்ற தொடரைக் காண்க

A) தென்னை ஓலையும் வேப்ப ஓலையும் கொண்டு வந்தான்

(B) தென்னை இலையும் வேப்பந்தழையும் கொண்டு வந்தான்

(C) தென்னங்கீற்றும் வேப்ப ஓலையும் கொண்டு வந்தான்

(D) தென்னங்கீற்றும் வேப்பந்தழையும் கொண்டு வந்தான்

(ஐ) மரபுப்பிழை இல்லாத தொடர் எது?

(A) பூந்தோப்பு (B) மாஞ்சோலை

(C) கம்பங்கொல்லை (D) பனந்தோட்டம்

**5. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.**

(அ) ஜெராக்ஸ் (Xerox) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

A) ஒளிநகல் (B) ஒலி நகல்

(C) அசல் படம் (D) மறு படம்

(ஆ) ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லை தேர்வு செய்க?

"இன்கம் டேக்ஸ் ஆபீஸ்" Income Tax Office"

A) வருமானத் துறை அலுவலகம் (B) வருமான வரி அலுவலகம்

(C) வருமான அலுவலகம் (D) வருவாய் அலுவகம்

(இ) ஆங்கில சொல்லிற்கு சரியான தமிழ் சொல் யாது?

'Indian Succession Act"

(A) இந்தியச் சான்றுச் சட்டம் (B) இந்திய உரிமைச் சட்டம்

(C)இந்திய வாரிசுரிமைச் சட்டம் (D) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்

(ஈ) "திருத்தப்படாத அச்சுப்படி" இதற்கு சரியான ஆங்கில சொல்லை காண்க?

(A) Fake news (B) Layout

(C) Green proof (D) Bulletin

(உ) ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக

(A) Lute Music - யாழிசை

(B) Grand Daughter – பேரன்

(C) Strom - சூறவாளி

(D) Didatic Compilation – புராண இலக்கியம்

**6. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்.**

(அ) ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை அறிக.

நாட்டுக்குத் தேவை –

(A) அரன் (B)அறன்

(C) அறண் (D) அரண்

(ஆ) வாலை, வாழை, வாளை ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக.

A) மீன்வகை, மரவகை, இளம்பெண்

(B) இளம்பெண், மரவகை, மீன்வகை

(C) இளம்பெண், மீன்வகை, மரவகை

(D) மரவகை, மீன்வகை, இளம்பெண்

(இ) ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை தேர்ந்தெழுதுதல்.

| <u>கலை</u> | | <u>களை</u> |
|---|---|---|
| A) கலைத்தல் | - | நீக்குதல் |
| (B) நுண்கலை | - | மனபாரம் |
| (C) ஆடை | - | மகிழ்ச்சி |
| (D) சிலை | - | களைத்தல் |

(ஈ) ஒலி வேறுபாடறிந்து சரியானப் பொருளை எழுதுக

<u>வாலை</u> – <u>வாளை</u>

(A) இளம்பெண் - மீன்வகை

(B) மீன்வகை - இளம்பெண்

(C) மரவகை - மீன்வகை

(D) இளம்பெண் – மரவகை

(உ) ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியானப் பொருளை எழுதுக

(A) ஆற்றங்கரை - சாயக்கறை

(B) சாயக்கரை - கடற்கறை

(C) கோலத் தறை - வரையரை

(D) கலங்கறை – கடற்கரை

**7. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.**

(அ) அரி என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க

(A) திருமால்

(B) அரிதல்

(C) சிங்கம்

(D) அறிவு

(ஆ) அணி என்பதன் தவறான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) அணிகலன்

(B) அழகு

(C) கொடுத்து

(D) உடுத்து

(இ) ஒரு பொருள் தரும் பல சொற்கள் - மதி

(A) திங்கள், நிலவு

(B) அறிவு, சந்திரன்

(C) பகல், சூரியன்

(D) மதித்தல், அறிவு

**8. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.**

(அ) "கல்" என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக?

(A)கற்றல் (B) கற்பனை

(C)கண்டான் (D) கல்லை

(ஆ) வந்தான் – வேர்ச்சொல்லைத் தருக.

A) வார் (B) வா

(C) வரு (D) வந்து

**9. வேர்ச்சொல்லைக் கொடுத்து / வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயரை / உருவாக்கல்.**

(அ) படி என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினை எச்சத்தை உருவாக்குக?

(A) படித்து (B) படித்தல்

(C) படித்த (D) பாடுதல்

(ஆ) வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க – "ஒறு"

(A) ஒறுத்தல் (B) ஒறுத்த

(C) ஒறுத்தவன் (D) ஒறுப்பான்

(இ) "வாழ்" எனும் வேர்ச்சொல்லின் வினையெச்ச வடிவம் தருக

(A) வாழ்ந்து (B) வாழ்ந்த

(C) வாழ்ந்தான் (D) வாழ்ந்தது

(ஈ) வேர்ச்சொல்லை தொழிற்பெயராக மாற்றுக – படி

(A) படிக்க (B) படித்தான்

(C) படித்து (D) படித்தல்

(உ) “எடு” என்ற சொல்லின் தொழிற்பெயரை கண்டறி

(A) எடுத்தான்

(B) எடுத்த

(C) எடுத்தல்

(D) எடுத்தவர்

**10. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்.**

(அ) அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) நைதல் நாடு நொச்சி நுங்கு (B) நுங்கு நொச்சி நாடு நைதல்

(C) நொச்சி நுங்கு நைதல் நாடு (D) நாடு நுங்கு நைதல் நொச்சி

(ஆ) அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்து எழுதுக.

(A) கொன்றை, கெண்டை, கண், கீரன், காடை

(B) கெண்டை, கீரன், கொன்றை, காடை, கண்

(C) கண், காடை, கீரன், கெண்டை, கொன்றை

(D) கண், கீரன், காடை, கொன்றை, கெண்டை

(இ) அகர வரிசையில் எழுதுக.

மொழிபெயர்ப்பு, முந்நீர், மேடுபள்ளம், மனத்துயர், மீமிசை

A) முந்நீர், மனத்துயர், மீமிசை, மொழிபெயர்ப்பு, மேடுபள்ளம்

(B) மேடுபள்ளம், முந்நீர், மீமிசை, மொழிபெயர்ப்பு, மனத்துயர்

(C) மீமிசை, முந்நீர், மொழிபெயர்ப்பு, மனத்துயர், மேடுபள்ளம்

(D) மனத்துயர், மீமிசை, முந்நீர், மேடுபள்ளம், மொழிபெயர்ப்பு

(ஈ) கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்து .

சுற்றம் சீர்தூக்கு சிந்தனை சாட்டை சங்கு

A) சீர்தூக்கு, சங்கு, சிந்தனை, சாட்டை, சுற்றம்

(B) சிந்தனை சீர் தூக்கு சங்கு சுற்றம் சாட்டை

(C) சாட்டை சுற்றம் சீர் தூக்கு சிந்தனை சங்கு

(D) சங்கு சாட்டை சிந்தனை சீர் தூக்கு சுற்றம்

**11. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்.**

(அ) சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

A) மாலை மீது மலையின் மழை பெய்தது நேற்று

(B) மலையின் மாலை மீது நேற்று பெய்தது மழை

(C) நேற்று மாலை மலையின் மீது மழை பெய்தது

(D) பெய்தது மழை மலையின் மீது நேற்று மாலை

(ஆ) சொற்களை ஒழுங்குபடுத்துக

"ஆற்றல் நிரம்பிய சொற்கள் கவிதை தாமாகப் பொங்கி வழிவது தான்"

A) தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை ஆற்றல் நிரம்பிய சொற்கள்

(B) ஆற்றல் நிரம்பிய கவிதை சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது தான்

(C) ஆற்றல் கவிதை நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது தான்

(D)ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது தான் கவிதை

(இ) சொற்களை ஒழுங்குபடுத்துக

வியனகர் குறைபடாக் கொளக் கூழுடை கொளக்

A) கொளக் கொளக் கூழுடை வியனகர் குறைபடாக்

(B) கூழுடை வியனகர் குறைபடாக் கொளக்கொளக்

(C) கொளக் கூழுடைய வியனகர் கொளக் குறைபடக்

(D) கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்

**12. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்**

(அ) சரியான இணையைத் தேர்ந்தெடு.

(A) அளி – கொடு

(B) ஆழி – குளம்

(C) களி - துன்பம்

(D) விளி - கருவி

**13. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.**

(அ) விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

பாரதிதாசன் புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்.

A) பாரதிதாசன் புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுகிறாரா?

(B) புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?

(C) பாரதிதாசன் புரட்சிக்கவி என அழைக்கப்படுவதேன்?

(D) பாரதிதாசன் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(ஆ) விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க

"உ.வே. சாமிநாத அய்யர் தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படுகின்றார்"

A) உ.வே. சாமிநாத அய்யர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?

(B) தமிழ்த் தாத்தா என்றால் என்ன?

(C) உ.வே. சாமிநாத அய்யர் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(D) உ.வே. சாமிநாத அய்யர் யார்?

**14. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் – தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்.**

(அ) தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க.

A) அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை

(B) அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்

(C) அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா?

(D) அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்.

(ஆ) பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(A) எழிலரசி சிலப்பதிகாரம் கற்றாள்

(B) எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது

(C) எழிலரசி சிலப்பதிகாரம் கல்லாள்

(D) எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்

(இ) பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்

(A) தன்வினை வாக்கியம்

(B) செய்வினை வாக்கியம்

(C) பிறவினை வாக்கியம்

(D) செயப்பாட்டுவினை வாக்கியம்

(ஈ) வாக்கிய அமைப்பினைக் கண்டறிக

மாலதி திருக்குறள் கற்றாள்

(A) தன்வினை (B) பிறவினை

(C) செய்வினை (D) செயப்பாட்டு வினை

(உ) சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாரால் எழுதப்பட்டது. இது எவ்வகை வினை

(A) செய்வினை

(B) தன்வினை

(C) செயப்பாட்டு வினை

(D) பிறவினை

**15. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்**

(அ) உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக

"இலவு காத்த கிளி போல"

(A) பதற்றம் (B) ஏற்றம்

(C) தடுமாற்றம் (D) ஏமாற்றம்

(ஆ) "கீரியும் பாம்பும் போல" – உவமை கூறும் பொருள் தெளிக

(A) வேற்றுமை (B) ஒற்றுமை

(C) பகைமை (D) நட்பு

(இ) உவமையால் விளக்கப் பெறும் பொருளைத் தேர்க

"அத்திப்பூத்தாற் போல"

(A) ஏமாற்றம் (B) அருமை

(C) உண்மை (D) நம்பிக்கை

**16. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச் சொல்)**

(அ) சரியான இணையைத் தேர்ந்தெடுக.

A) செலவாணி - செலாவணி

(B) குற்றஞ்சாட்டு - குற்றம்சாட்டு

(C) ஆண்டுத்தொகை - வருடத்தொகை

(D) மனதில் பதியவை - மனம் பதிய வை

(ஆ) தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

A) நிலை அடுக்கி - நிலை அடுக்கு

(B) சீர்ப்படுத்து - சீர்படுத்து

(C) கைம்மாறு - கைமாறு

(D) பணியிடம் - பணியீடம்

**17. விடை வகைகள்.**

(அ) கடைத்தெரு எங்குள்ளது? என்ற வினாவிற்கு வலப்பக்கத்தில் உள்ளது எனக் கூறல் எவ்வகை விடை.

(A) ஏவல் விடை (B) சுட்டு விடை

(C) நேர் விடை (D) மறை விடை

(ஆ) விடை வகையை கண்டறிதல்

"பேருந்து அதோ, அங்கே நிற்கும்" என்ற மற்றொருவர் கூறுவது

(A) மறை விடை (B) இனமொழி விடை

(C) சுட்டு விடை (D) வினா எதிர் வினாதல்

(இ) நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்கு "கால் வலிக்கிறது" என்று விடை கூறுவது

A) உறுவது கூறல் விடை

(B) நேர்விடை

(C) வினா எதிர் வினாதல் விடை

(D) உற்றது உரைத்தல் விடை

**18. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் (எ.கா.) கோல்டு பிஸ்கட் – தங்கக் கட்டி.**

(அ) பிறமொழிச் சொற்கள் கலவாத தொடரை எடுத்து எழுதுக.

(A) சினிமா தியேட்டர் அருகாமையில் உள்ளது

(B) திருநெல்வேலி சமஸ்தானம் பெரியது.

(C) விழாவிற்கு முக்கியஸ்தர்கள் வந்துள்ளனர்.

(D) வானூர்தி ஒரு அறிவியல் ஆக்கம்

(ஆ) பொருத்துக

A) Mould - (1) உதிர்

(B) Moult - (2) மண்மேடு

(C) Mound - (3) குன்று

(D) Mount - (4) அச்சு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(இ) பொருத்துக

A) கொண்டல் - (1) மேற்கு

(B) கோடை - (2) தெற்கு

(C) வாடை - (3) கிழக்கு

(D) தென்றல் - (4) வடக்கு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(ஈ) இதில் தவறான இணை எது?

A) விஞ்ஞானம் - அறிவியல்

(B) பிரதானம் - முதன்மை

(C) உத்தியோகஸ்தர் - அலுவலர்

(D) சமஸ்தானம் - துறை

19. **ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக**

(அ) சரியான ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக

(A) தஞ்சை - தஞ்சாவூர்

(B) கும்பை - கும்பகோணம்

(C) மயிலை - மயிலாடு துறை

(D) மன்னார் - மன்னார்குடி

(ஆ) தவறான ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக

(A) கோவை - கோயம்புத்தூர்

(B) உதகை - உதகமண்டலம்

(C) நெல்லை - திருநெல்வேலி

(D) புதுமை - புதுக்கோட்டை

20. **நிறுத்தற்குறிகளை அறிதல்.**

(அ) நிறுத்தற்குறி அறிக (எது சரியானது)

(A) கண்ணன் பள்ளிக்குச் சென்றான் . பாடம் படித்தான்.

(B) கண்ணன் பள்ளிக்குச் சென்றான், பாடம் படித்தான்.

(C) கண்ணன் பள்ளிக்குச் சென்றான் ; பாடம் படித்தான்.

(D) கண்ணன் பள்ளிக்குச் சென்றான் : பாடம் படித்தான்.

(ஆ) எது சரியானது

(A) பொற்செல்வி பாடம் படித்துவிட்டாயா.

(B) என்னே! இப்பூவின் மணம்.

(C) மா, பலா, வாழை முக்கனிகள்?

(D) கண்ணன் நன்றாக படித்தான், முதல்மதிப்பெண் பெற்றான் : பரிசு கிடைத்தது.

**21. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு (வாரான் – வருகிறான்).**

(அ) பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு

1) உணவு செய்தால்

2) உணவு சமைத்தாள்

3) உணவு உண்டாக்கினாள்

4) உணவு உருவாக்கினாள்

(A) 1மட்டும் சரி (B) 2 சரி

(C) 3 தவறு (D) 3, 4 சரி

**22. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்.**

(அ) சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்.

சிங்கக் -------------------------- சரியான சொல்

A) குட்டி (B) குஞ்சு

(C) குருளை (D) கன்று

**23. பொருத்தமான காலம் அமைத்தல்**

**(இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்).**

(ஆ) சரியான இணையை தேர்ந்தெடு

(A) முருகன் பாடம் படித்தான் (எதிர்காலம்)

(B) நாளை பள்ளிக்கு வருவேன் ( எதிர்காலம்)

(C) நாளை பள்ளிக்கு விடுமுறை (இறந்த காலம்)

(D) நேற்று மழை பெய்தது ( நிகழ்காலம்)

(இ) தவறான இணையை தேர்ந்தெடு

(A) மாலையில் சூரியன் மறைந்தது (எதிர்காலம்)

(B) காலையில் சூரியன் உதித்தது (இறந்த காலம்)

(C) நண்பகல் மழை பெய்கிறது (நிகழ்காலம்)

(D) நாளை மழை பெய்யும் (எதிர்காலம்)

**24. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.**

(அ) சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

1) மாடுகள் எங்கு மேய்ந்தன?

2) மாடுகள் எங்கு மேய்ந்தது?

3) மாடுகள் எது மேய்ந்தன?

4) மாடுகள் ஏது மேய்ந்தன?

(A) 1மட்டும் சரி (B) 2 சரி

(C) 3 தவறு (D) 4 சரி

**25. சரியான இணைப்புச் சொல்**

**(எனவே, ஏனெனில், ஆகையால், அதனால், அதுபோல).**

(அ) கீழ்க்கண்டவற்றில் சரியான இணைப்பு சொல்லை எழுதுக

நான் நன்றாகப் பொருளுணர்ந்து படித்தேன் ; --------------------- தேர்வில் முதலிடம் பெற்றேன்.

(A) அதனால் (B) ஆகையால்

(C) எனவே (D) ஏனெனில்

(ஆ) சரியான இணையை தேர்ந்தெடுக்க

பொருளில்லாதவருக்கு இந்த உலகம் இல்லை. -------------- மகிழ்ச்சிக்கு வழி பணமே என தீர்ப்பளிக்கப்பட வேண்டும்

(A) அதனால் (B) எனவே

(C) அதுபோல (D) ஆகையால்

**26. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.**

(அ) அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க

(குரல்)

A) கவலைக்கு ------------------- கொடு

(B) பசித்தவனுக்கு ---------------- கொடு

(C) உரிமைக்கு -------------------------- கொடு

(D) கவிதைக்கு ------------------------- கொடு

(ஆ) அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (கலப்பை)

(A) -------------------------- பிடிக்கும் கை

(B) ---------------------------- நோக்கும் கை

(C) ------------------------------- நீக்கும் கை

(D) ------------------------------- காக்கும் கை

(இ) அடைப்புக்குள் உள்ளசொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (ஆழி)

(A) -------------------------- காக்கும் கை

(B) ---------------------------- தரித்தே அருளும் கை

(C) ------------------------------- நீக்கும் கை

(D) ------------------------------- பிறக்கும் கை

**27. இருபொருள் தருக.**

(அ) பா - இரு–பொருள் தருக.

| | | |
|---|---|---|
| A) பாடல் | - | (1) பண் |
| (B) பாசம் | - | (2) பழும் |
| (C) பாழ் | - | (3) பால் |
| (D) பழுது | - | (4) பரி |

(A) (A) (B) (C)

(C) (B) (D) (D)

**28. குறில் – நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு.**

(ஆ) குறில் – நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு.

| | | |
|---|---|---|
| **செய்** | - | **சேய்** |
| A) பகுதி | - | (1) பாதி |
| (B) செயல் | - | (2) குழந்தை |
| (C) செயல் | - | (3) சேறு |
| (D) சேறு | - | (4) குழந்தை |

(A) (D) (B) (C)

(C) (B) (D) (A)

**29. கூற்று, காரணம் – சரியா? தவறா?**

(அ) கீழ்க்கண்ட கூற்றுகள் சரியா? தவறா?

கூற்று 1 : தமிழ் அதன் தன்மையில் தனித்து இயங்கும் பண்பு கொண்டது

கூற்று 2 : தமிழில் பல சொற்கள் ஒரு பொருளை குறிக்க பயன்பாட்டில் உள்ளதால்

(A) கூற்று இரண்டும் சரி (B) கூற்று 2 மட்டும் சரி

(C) கூற்று 1 மட்டும் சரி (D) கூற்று இரண்டும் தவறு

(ஆ) "ஈயென இரத்தல் இழிந்தன்று ; அதன் எதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;"

கூற்று 1: இப்பாடலடிகளைப் பாடியவர் கழைதின் யானை யார்

கூற்று 2 : இப்பாடலில் புகழப்படும் வள்ளல் பாரி

(A) கூற்று இரண்டும் சரி (B) கூற்று 2 மட்டும் சரி

(C) கூற்று 1 மட்டும் சரி (D) கூற்று இரண்டும் தவறு

30. **கலைச் சொற்களை அறிதல் :-**

**எ.கா. – Artificial Intelligence – செயற்கை நுண்ணறிவு**

**Super Computer - மீத்திறன் கணினி**

(அ) **சரியான கலைச் சொல்லை அறிக**

(A) Ultra violet rays - புற ஊதாக் கதிர்கள்

(B) Cosmic rays - விண்மீன் கதிர்கள்

(C) Space Technology - தகவல் தொழில் நுட்பம்

(D) Bio – Technology - உயர் தொழில் நுட்பம்

(ஆ) **தவறான கலைச்சொல் அறிக**

(A) Aesthetics - அழகியல்

(B) Artifact - கலையியல்

(C) Myth - மேன்மை

(D) Terminology - கலையியல்

(இ) **கலைச்சொல் அறிக**

Emblem

(A) சின்னம் (B) வண்ணம்

(C) வரைபடம் (D) தேசியப்படம்

31. **பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்**

(அ)

| சொல் | பொருள் |
|---|---|
| 1. வேதம் | - அ) அறியாமை |
| 2. ஞானம் | - ஆ) உலகம் |
| 3. மடமை | - இ) மறை |
| 4. வையம் | - ஈ) அறிவு |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஆ | அ | இ | ஈ |
| C) | இ | அ | ஆ | ஈ |
| D) | ஈ | இ | ஆ | அ |

**32. சொற்களின் கூட்டுப் பெயர்கள் (எ.கா.) புல் –புற்கள்**

**(அ) மாமரம் – கூட்டுப் பெயர்**

(A) மாந்தோப்பு (B) மாஞ்சோலை

(C) மாங்காடு (D) மாங்கொல்லை

**33. சரியான சொற்றொடரை தேர்ந்தெடுத்து எழுதுக.**

(அ) குழலியும் பாடத் தெரியும் – தொடரில் உள்ள பிழையை நீக்கி சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

A) குழலிக்குப் பாடத்தெரியும்

B) குழலியின் பாடத்தெரியும்

C) குழலி பாடத்தெரியும்

D) குழலியால் பாடத்தெரியும்

(ஆ) A) "ஆர்னித்தாலஜி" என்பது படிப்பாகிய பறவை ஆகும்.

B) பறவையும், படிப்பும் "ஆர்னித்தாலஜி"

C) பறவைப் பற்றிய படிப்பு "ஆர்னித்தாலஜி" எனப்படும்

D) பறவையின் இனப் பெருக்கமே "ஆர்னித்தாலஜி"

**34. பிழை திருத்துக (ஒரு-ஓர்)**

(அ) சரியான பதிலை தேர்ந்தெடு.

A) ஓர் இரவு B) ஒரு இரவு

C) ஒன்று இரவு D) ஓரிரவு

**35. சொல் – பொருள் – பொருத்துக**

(அ) பொருத்துக

| **சொல்** | | **பொருள்** |
|---|---|---|
| A) நாமம் | - | (1) பன்றி |
| (B) ஓதி | - | (2) மலை |
| (C) வெற்பு | - | (3) கூந்தல் |
| (D) கேழல் | - | (4) பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(ஆ) பொருத்துக

| சொல் | | பொருள் |
|---|---|---|
| A) மிடிமை | - | (1) திருமணம் |
| (B) உரவு | - | (2) வயது |
| (C) வதுவை | - | (3) வறுமை |
| (D) அகவை | - | (4) வலிமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**36. ஒருமை-பன்மை பிழை**

(அ) ஒருமை பன்மை பிழையை நீக்குக

A) புலிகள் இரண்டும் வருகின்றது

(B) நானும் அவனும் வந்தோம்

(C) மயில்கள் அகவுகிறது

(D) மேற்கூறிய எதுவும் இல்லை

(ஆ) ஒருமை பன்மை பிழை நீக்குக

(A) அதுகள் இங்கே உள (B) அதுகள் இங்கே உள்ளன

(C) அவை இங்கே உள்ளன (D) அதுகள் இங்கே உள்ளது

37 **கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.**

(அ) தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடே.

"தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று அதனளவில் சார்புடையது. மற்றொன்று, உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருந்தக்கூடியது. அதாவது, தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத் தரக்கூடிய "புறக்கூறுகள்" பண்பாடு சார்ந்தும், அவற்றின் "அகக்கூறுகள்" உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும்."

பாவாணர் கூறுவது போல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை, முன்னது "அகக்கூறு" பின்னது "புறக்கூறு". நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடுமுண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது.

பல சந்தர்ப்பங்களில் தமிழர் பண்பாடு இது, தமிழர் பண்பாடு இதுவல்ல என்று தெளிவாக வரையறுப்பது கடினமாகினும் ஒரு அறிவுசார் மதிப்பீடு செய்ய முடியும். எடுத்துக்காட்டாக யூத சமயமோ, சீக்கிய சமயமோ தமிழர் பண்பாட்டு வட்டத்துக்குள் வரமாட்டா. மாறாகச் சைவ சமயத்துக்குத் தமிழர் பண்பாட்டுடன் ஒரு இறுகிய தொடர்பு உண்டு.

புறக்கூறுகள் கீழ்கண்ட ஒன்றைச் சார்ந்தது

(A) பண்பாடு (B) இலக்கியம்

(C) வாழ்வியல் (D) உலகளாவியல்

பண்பாடு என்பது திருத்திய ஒழுக்கம் எனக் கூறியவர் யார்?

(A) பாவாணர் (B) திருவள்ளுவர்

(C) பாரதியார் (D) பாரதிதாசன்

தமிழர் பண்பாடு என்பது எவ்வகைப் பண்பாடு?

(A) ஒருநிலை (B) சமநிலை

(C) நிலையியல் (D) இயங்கியல்

தமிழர் பண்பாடு எந்த சமயத்துடன் இறுகிய தொடர்புடையது?

(A) வைணவம் (B) இந்து

(C) சைவம் (D) ஏதுமில்லை

நாகரிகம் என்பது எவ்வகை நாகரிகம்?

(A) திருந்திய வாழ்க்கை (B) திருத்திய வாழ்க்கை

(C) பண்பாடு (D) கலச்சாரம்